# 2008ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையச் சட்டம்

## (தமிழ்நாடு சட்ட எண் 31/2008)

(2023, அக்டோபர் 31 அன்று இருந்தவாறு)

# The Tamil Nadu State Commission for Women Act, 2008

## (Tamil Nadu Act No. 31 of 2008)

(as on 31st October, 2023)

**தமிழாக்கம் :**

**தமிழ்நாடு மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையம்**

**சென்னை**

தமிழ்நாடு அரசுக்காகத் தமிழ்நாடு அரசு எழுதுபொருள் அச்சுத்துறை ஆணையரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

2023

# 2008ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையச் சட்டம்

## தமிழ்நாடு சட்ட எண் 31/2008

பிரிவு பொருளடக்கம்


### அத்தியாயம்–I
### முன்னுரை

1. குறுந்தலைப்பு, பரப்பெல்லை மற்றும் தொடக்கம்.
2. பொருள்வரையறைகள்.

### அத்தியாயம்–II
### தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம்

3. ஆணையத்தை அமைத்துருவாக்குதல்.
4. தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பதவிக்காலமும் பணி நிபந்தனைகளும்.
5. காலியிடங்கள் முதலானவை, ஆணையத்தின் நடவடிக்கைகளைச் செல்லத்தகாதது ஆக்காது.
6. ஆணையத்தின் அலுவலர்களும் பிற பணியாளர்களும்.

### அத்தியாயம்–III
### ஆணையத்தின் பணிகள்

7. ஆணையத்தின் பணிகள்.
8. ஆணையத்தின் குழுக்கள்.
9. நடைமுறைகள் ஆணையத்தால் முறைப்படுத்தப்படுதல்.

10. புலனாய்வு நடத்துவதற்காக ஒருசில அலுவலர்கள் மற்றும் புலனாய்வு முகவாண்மைகளின் சேவையினைப் பயன்படுத்துவதற்கு ஆணையத்திற்கு உள்ள அதிகாரம்.

## அத்தியாயம்–IV
## நிதி, கணக்குகள் மற்றும் தணிக்கை

11. அரசு வழங்கும் மானியங்கள்.
12. ஆண்டுக் கணக்குகள் மற்றும் தணிக்கை.
13. ஆண்டறிக்கை.
14. ஆண்டறிக்கையும் தணிக்கை அறிக்கையும் சட்டமன்றப் பேரவை முன்பு வைக்கப்படுதல் வேண்டும்.

## அத்தியாயம்–V
## பல்வகை

15. ஆணையத்தின் தலைவர், உறுப்பினர்கள் மற்றும் பணியாளர் முதலானோர் பொது ஊழியர்கள் ஆவர்.
16. ஆணையத்திடம் நபர்களால் அளிக்கப்படும் வாக்குமூலங்கள்.
17. பிற சட்டங்களின் பொருந்துகை தடை செய்யப்படுதல் கூடாது.
18. நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்குப் பாதுகாப்பு.
19. இடர்ப்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்.
20. விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்.

# 2008ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையச் சட்டம்
# தமிழ்நாடு சட்ட எண் 31/2008

[தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2008ஆம் ஆண்டு மே திங்கள் 26ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்று பொதுத்தகவலுக்காகத் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டது.]

**தமிழ்நாடு மாநிலத்தில் மகளிருக்காக ஓர் ஆணையத்தை அமைத்துருவாக்குவதற்கும் அது தொடர்பான அல்லது அதற்கு இடைவிளைவான பொருட்பாடுகளுக்கும் வகைசெய்வதற்கான ஒரு சட்டம்.**

இந்தியக் குடியரசின் ஐம்பத்து ஒன்பதாம் ஆண்டில், தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப்பேரவையால் இயற்றப்பட்ட சட்டம் பின்வருமாறு:–

## அத்தியாயம் – I
## முன்னுரை

**1. குறுந்தலைப்பு, பரப்பெல்லை மற்றும் தொடக்கம்.–** (1) இந்தச் சட்டம் 2008ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையச் சட்டம் என வழங்கப்படும்.

(2) இது, தமிழ்நாடு மாநிலம் முழுவதையும் பரவி நிற்கும்.

(3) இது, அரசு அறிவிக்கையின் மூலம் குறிப்பிடக்கூடிய அத்தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**2. பொருள்வரையறைகள்.–** இந்தச் சட்டத்தில், தறுவாய் வேறுபொருள் குறித்தாலன்றி,–

(a) "ஆணையம்" என்பது, பிரிவு 3இன்படி, அமைத்துருவாக்கப்பட்ட தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம் எனப் பொருள்படும்;

(b) "அரசு" என்பது, மாநில அரசு எனப் பொருள்படும்;

(c) "உறுப்பினர்" என்பது, ஆணையத்தின் ஓர் உறுப்பினர் எனப் பொருள்படுவதோடு, தலைவரையும், உறுப்பினர் செயலாளரையும் உள்ளடக்கும்;

(d) "நபர்" என்பது, நிறுவகம், நிறுமம், கழகம் ஒன்றையோ அல்லது பொதுத்துறை நிறுவனம், நபர்களின் சங்கம் எதனையுமோ அல்லது அரசு மற்றும் அரசிடமிருந்து உதவி பெறுகின்ற முகவாண்மைகள் உள்ளடங்கலான அதன் முகவாண்மைகள் எனப் பொருள்படும்;

(e) "வகுத்துரைக்கப்பட்டது" என்பது விதிகளால் வகுத்துரைக்கப்பட்டது எனப் பொருள்படும்;

(f) "மகளிர்" என்பது, எந்த வயதிலும் உள்ள ஒரு பெண்ணைக் குறிக்கும்.

## அத்தியாயம் – II

## தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம்

3. **ஆணையத்தை அமைத்துருவாக்குதல்.–** (1) அரசு, அறிவிக்கை வாயிலாகத் தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம் என்றழைக்கப்படும் ஓர் அமைப்பை, இந்தச் சட்டத்தின்படி, அதற்கு வழங்கப்பட்ட அதிகாரத்தைச் செலுத்துவதற்கும், அதற்குக் குறித்தளிக்கப்பட்ட அலுவற்பணிகளை ஆற்றுவதற்கும் அமைத்துருவாக்குதல் வேண்டும்.

(2) ஆணையமானது, பின்வருபவர்களைக் கொண்டிருக்கும்,–

(a) பெண்களின் வளர்ச்சி நோக்கிற்குத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டுள்ள அரசால் பெயர்குறித்து நியமிக்கப்பட வேண்டிய சிறந்த பெண்மணி ஒருவரே தலைவர் ஆவார்;

(b) மகளிரின் வளர்ச்சிக்கு சேவை செய்த அல்லது சட்டம் மற்றும் சட்டமியற்றுதலைப் பற்றிப் போதிய அறிவும் அனுபவமும் கொண்ட மகளிரின் மேம்பாட்டிற்கு அல்லது மகளிருக்கான தன்னார்வ நிறுவனம் தொடர்பான விவரங்களின் நிருவாகத்தைப் பற்றிப் போதிய அறிவும் அனுபவமும் கொண்டிருக்கிற அல்லது மகளிரின் பொருளாதார மேம்பாடு, சுகாதாரம் அல்லது கல்வித்துறையில் போதிய அனுபவமும் திறனும் நம்பகத்தன்மையும் கொண்ட நபர்களுக்கிடையே இருந்து அரசால் பெயர் குறித்து நியமிக்கப்படும் ஐந்து உறுப்பினர்கள்:

**முதலாம் வரம்புரை**: ஆனால், பெயர் குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர்களில் மூன்றிற்குக் குறையாதவர்கள் மகளிராக இருத்தல் வேண்டும்:

**இரண்டாம் வரம்புரை**: மேலும் பட்டியல் சாதியினரைச் சேர்ந்த நபர்களுக்கு இடையே இருந்து ஓர் உறுப்பினரும், பட்டியல் பழங்குடியினரைச் சேர்ந்த நபர்களுக்கு இடையே இருந்து குறைந்தது ஓர் உறுப்பினரும் இடம்பெறுதல் வேண்டும்:

(c) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களுக்கு இடையே இருந்து அரசால் பெயர்குறித்து நியமிக்கப்படும் இரண்டு உறுப்பினர்கள்:

**வரம்புரை**: ஆனால் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் ஓர் உறுப்பினராய் இருப்பவர், தாம் தமிழ்நாடு

சட்டமன்றப் பேரவை உறுப்பினராய்ப் பதவி வகிப்பது அற்றுப் போகிற அத்தேதியிலிருந்து ஆணையத்தின் உறுப்பினராய் இருப்பதும் அற்றுப்போதல் வேண்டும்.

(d) சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசுச் செயலாளர், பதவிவழி உறுப்பினர் ஆவார்.

(e) அரசு இணைச்செயலாளர் பதவி படிநிலைக்குக் குறையாத பதவியில் உள்ள இந்திய ஆட்சிப் பணியைச் சேர்ந்த அலுவலர் ஒருவர், அரசால் உறுப்பினர் செயலாளராக அமர்த்தப்படுதல் வேண்டும்.

**4. தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பதவிக் காலமும் பணி நிபந்தனைகளும்.–** (1) இதன் பொருட்டு அரசால் குறித்துரைக்கப்படும் மூன்றாண்டிற்கு மிகாத அத்தகைய காலஅளவிற்குத் தலைவரும், உறுப்பினர் ஒவ்வொருவரும் பதவி வகித்தல் வேண்டும்.

(2) தலைவருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தத்தக்க மதிப்பூதியமும் படித்தொகைகளும் மற்றும் பணி பற்றிய வரையறைகளும் நிபந்தனைகளும் வகுத்துரைக்கப்படும் விதத்தில் இருத்தல் வேண்டும்.

(3) தலைவரோ அல்லது உறுப்பினர் ஒருவரோ, எந்நேரத்திலும் அரசுக்கு முகவரியிடப்பட்டு எழுத்து வடிவிலான கடிதம் மூலமாகத் தலைவர் பதவியிலிருந்தோ அல்லது நிகழ்விற்கேற்ப உறுப்பினர் பதவியிலிருந்தோ விலகிக்கொள்ளலாம்.

(4) உட்பிரிவு (1)இல் என்ன அடங்கியிருந்த போதிலும், அரசு–

(a) அவர், தீர்க்கப்படாத நொடிப்பு நிலையராக இருக்கிறவரானால்;

(b) அவர், அரசின் கருத்தில் ஒழுக்கக் கேட்டினை உள்ளடக்கிய குற்றச்செயல் ஒன்றிற்காகக்

குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கப்பட்டுச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளவராக இருப்பாரானால்;

(c) அவர், மனச் சீர்கேடுற்றவராகி, ஒரு தகுதி வாய்ந்த நீதிமன்றத்தால் அவ்வாறு விளம்பப்பட்டு இருப்பாரானால்;

(d) அவர், செயல்பட மறுப்பாரானால் அல்லது செயல்படத் திறனற்றுப் போவாரானால்;

(e) அவர், ஆணையத்தின் அனுமதி இல்லாமல், தொடர்ந்தாற்போல் அதன் மூன்று கூட்டங்களுக்கு வராதிருப்பாரானால்; அல்லது

(f) அரசின் கருத்தில் அவர் பொதுமக்களின் நலனுக்குக் கேடு விளைவிக்கும் வகையில் பதவியில் தம்மை அந்நபர் தொடர்ந்திருக்குமாறு செய்யும் பொருட்டுத் தம் தலைவர் அல்லது நிகழ்விற்கேற்பத் தம் உறுப்பினர் பதவி நிலையைத் தவறாகப் பயன்படுத்துவாரானால்,

அவரைத் தலைவர் அல்லது உறுப்பினர் பதவியிலிருந்து நீக்குதல் வேண்டும்:

**வரம்புரை**: ஆனால், இந்த உட்பிரிவின்படி, அந்தப் பொருள் குறித்து நபர் எவருக்கும் அவர்தம் தரப்பினைக் கேட்பதற்கு நியாயமான வாய்ப்பொன்று கொடுக்கப்படும் வரையில் அந்நபர் எவரும் பதவியிலிருந்து நீக்கப்படுதல் கூடாது.

(5) அரசால், உட்பிரிவு (3) அல்லது (4)இன்படியோ அல்லது பிறவாறோ, ஏற்பட்ட காலியிடம் ஒன்று, புதிதாகப் பெயர்குறித்து நியமிப்பதன் மூலம் நிரப்பப்படுதல் வேண்டும் மற்றும் அவ்வாறு பெயர்குறித்து நியமிக்கப்பட்டவரின் காலியிடத்தில், அவர் வகித்துவிட்டு எஞ்சிய காலஅளவிற்கு, அந்தக் காலியிடம் ஏற்படாததைப் போன்றே பதவி வகித்து வருதல் வேண்டும்:

**வரம்புரை**: ஆனால், அந்தத் தலைவர் நீங்கலாகப் பிற உறுப்பினர் ஒருவரின் காலியிடம், அந்த உறுப்பினரின் பதவிக் காலம் எந்தத் தேதியில் முடிவடைகின்றதோ, அந்தத் தேதிக்கு அடுத்து முந்தைய ஆறு மாதங்களுக்குள் ஏற்படுமானால், அத்தகைய காலியிடம் எதுவும் நிரப்பப்படுதல் கூடாது.

**விளக்கம்.–** இந்தப் பிரிவின் நோக்கத்திற்காக, "உறுப்பினர் என்பது, "உறுப்பினர் செயலாளரை" மற்றும் "ஒரு பதவி வழி உறுப்பினரை" உள்ளடக்காது.

**5. காலியிடங்கள் முதலானவை, ஆணையத்தின் நடவடிக்கைகளைச் செல்லத்தகாதது ஆக்காது.–** ஆணையத்தின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும், பொருட்பாட்டின் தகுதிப்பாடுகளைப் பாதிக்காத நிலையில் ஆணையத்தில் காலியிடம் எதுவும் இருக்கிறது அல்லது அதன் அமைப்பில் குறைபாடு இருக்கிறது அல்லது தலைவராக அல்லது ஓர் உறுப்பினராகச் செயல்படுகின்ற நபர் ஒருவரைப் பெயர் குறித்து நியமிப்பதில் குறைபாடு எதுவும் இருக்கிறது அல்லது ஒரு கூட்டத்தை நடத்துவதற்காகப் பிறப்பிக்கப்படும் அறிவிப்பு உள்ளடங்கலாக, ஆணையத்தின் நடைமுறையில் முறைகேடு எதுவும் உள்ளது என்ற காரணத்தினால் மட்டுமே, ஆட்சேபிக்கப்படுதலோ அல்லது செல்லத் தகாததோ ஆக்காது.

**6. ஆணையத்தின் அலுவலர்களும் பிற பணியாளர்களும்.–** (1) அரசு, இந்தச் சட்டத்தின்படி ஆணையத்தின் அலுவற்பணிகளைத் திறம்பட நிறைவேற்றுவதற்குத் தேவைப்படக்கூடிய அத்தகைய அலுவலர்களுக்கும் பணியாளர்களுக்கும் ஆணையத்தில் வகைசெய்தல் வேண்டும்.

(2) ஆணையத்தின் அலுவலர்கள் மற்றும் பிற பணியாளர்களுக்கு வழங்கப்படத்தக்க சம்பளங்களும் படித்

தொகைகளும் மற்றும் பிற பணிவரையறைகளும் நிபந்தனைகளும் வகுத்துரைக்கப்படுமாறு இருத்தல் வேண்டும்.

(3) உட்பிரிவு (1)இல் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலர்களும் பணியாளர்களும் தலைவரின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் வருதல் வேண்டும்.

**அத்தியாயம் – III**

**ஆணையத்தின் பணிகள்**

**7. ஆணையத்தின் பணிகள்.–** (1) 1990ஆம் ஆண்டு தேசிய மகளிர் ஆணையச் சட்டத்தின் (மையச் சட்டம் 20/1990), பிரிவு 10இன்படி மகளிர் தேசிய ஆணையத்தின் பணிகளின் செயல்பாட்டிற்கு உட்பட்டு, ஆணையமானது பின்வரும் பணிகளில் அனைத்தையுமோ அல்லது அவற்றுள் ஏதேனும் ஒன்றையோ நிறைவேற்றலாம், அதாவது:–

(a) மகளிரின் பாதுகாப்புத் தொடர்பாக, இந்திய அரசியலமைப்பு மற்றும் பிற சட்டங்களில் வகை செய்யப்பட்டுள்ள அனைத்துப் விவரங்ககளையும் புலனாய்வு செய்தலும் விசாரணை செய்தலும் வேண்டும்.

(b) ஆணையம், ஆண்டுதோறும் மற்றும் பொருத்தமெனக் கருதுகிற பிற நேரங்களில் பாதுகாப்பு நடவடிக்கைகளின் செயல்பாட்டின் மீதான அறிக்கைகளை அரசிற்கு அளித்தல் வேண்டும்;

(c) மகளிரின் நிலைகளை மேம்படுத்துவதற்கு, அப்பாதுகாப்பு நடவடிக்கைகளை அரசு திறம்பட செயல்படுத்துவதற்காக அறிக்கைகளில் பரிந்துரைகளைச் செய்தல் வேண்டும்;

(d) மகளிரைப் பாதிக்கிற வகையில் உள்ள தற்போது இருந்துவரும் சட்டங்களின் வகைமுறைகளை, அவ்வப்போது மறு ஆய்வு செய்து,

அத்தகைய சட்டங்களில் காணப்படும் விடுபாடுகள், குறைபாடுகள், அல்லது குற்றங்குறைகளைக் களைவதற்குத் தீர்வு காணும் சட்ட நடவடிக்கைகளுக்கு வகைசெய்யும் பொருட்டு, அவற்றுக்கான திருத்தங்களுக்குப் பரிந்துரைத்தல் வேண்டும்;

(e) இந்திய அரசியலமைப்பு மற்றும் பிறசட்டங்களின் வகைமுறைகளை மகளிர் தொடர்பான வழக்குகளைச் சம்மந்தப்பட்ட அதிகாரஅமைப்புகளிடம் முறையிடுதல் வேண்டும்;

(f) மகளிர் உரிமைப் பாதுகாப்பிற்கும், சமத்துவம் மற்றும் மேம்பாட்டு நோக்கினை அடைவதற்கும் வகைசெய்கிற சட்டங்கள் எவற்றையும் செயற்படுத்தாமை;

(i) மகளிர் துயர் தணிக்கவும் நல்வாழ்விற்கு உறுதியளித்தும் பெண்களுக்கு தீர்வழிக்காண வகைசெய்யும் நோக்குடைய கொள்கை முடிவுகள், வழிகாட்டு நெறிகள் அல்லது அறிவுறுத்தல்களை நிறைவேற்றாமை, ஆகியவை தொடர்பான முறையீடுகளை கவனித்து அந்த விவரங்களில் தாமே அறிவிப்பை எடுத்துக்கொண்டு விவிரங்களிளிருந்து எழும் சிக்கல்களை சம்பந்தப்பட்ட அதிகாரஅமைப்புகளின் கவனத்திற்குக் கொண்டு செல்லுதல்.

(g) மகளிருக்கு எதிராக வேற்றுமை பாராட்டுதல் மற்றும் அவர்களுக்கு இழைக்கப்படும் வன்கொடுமைகளிலிருந்து எழுகின்ற குறித்த சில சிக்கல்கள் அல்லது சூழ்நிலைகளைச் சிறப்பாக ஆய்வு நடத்தி அல்லது புலனாய்வுகளை மேற்கொண்டு, அவற்றை அகற்றுவதற்கான உத்திகளைப் பரிந்துரைக்கும் பொருட்டுத் தடைகளை அடையாளம் காணுதல் வேண்டும்.

(h) அனைத்துப் பிரிவுகளிலும் மகளிருக்குரிய பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தும் வழிகளுக்கு ஆலோசனை வழங்கும் பொருட்டு, மேம்பாடு மற்றும் கல்விசார் ஆய்வினை மேற்கொண்டு, அவர்களின் மேம்பாட்டினைத் தடுப்பதற்குப் பொறுப்புடைய காரணங்களை, அதாவது இல்லப் பராமரிப்பு மற்றும் அடிப்படைப் பணி சேவைகளின் குறைவு, மட்டுமீறிய பணியைக் குறைப்பதற்கான மற்றும் தொழில்சார் சுகாதார இடர்ப்பாடுகளைக் குறைப்பதற்கான ஆதார பணிச் சேவைகள் மற்றும் அவற்றின் உற்பத்தித் திறனை உயர்த்துவதற்கான தொழில்நுட்பங்கள் போதிய அளவு இல்லாமை ஆகியனவற்றை அடையாளம் காணுதல் வேண்டும்;

(i) மகளிரின் சமூகப் பொருளாதார மேம்பாட்டுத் திட்டச் செயல்பாட்டில் பங்கேற்று ஆலோசனை வழங்குதல் வேண்டும்;

(j) மகளிரின் மேம்பாட்டு வளர்ச்சியினை மதிப்பிடுதல் வேண்டும்;

(k) மகளிர் கைதிகளாகவோ அல்லது பிறவாறோ வைத்து வரப்படும் சிறைச்சாலை, காவல் இல்லம், பெண்களின் நிலையம் அல்லது பாதுகாப்பில் வைக்கப்படும் பிற இடம் ஒன்றை ஆய்வு செய்தல் அல்லது ஆய்வு செய்யப்படுமாறு செய்து, தீர்வு காணும் நடவடிக்கைக்காகத் தொடர்புடைய அதிகாரஅமைப்புகளிடம் தேவைப்படும் இடத்திற்கு அந்தப் பொருட்பாட்டினை எடுத்துச் செல்லுதல் வேண்டும்;

(l) மகளிர் தொடர்பான சிக்கல்களை உள்ளிட்ட வழக்கினை நடத்துதலும் நிதி வழங்குதலும் வேண்டும்;

(m) மகளிரைச் சார்ந்த விவரம் எதன்பேரிலும் குறிப்பாக அவ்வப்போது மகளிர்

சந்தித்துவரும் இடர்ப்பாடுகளைப் பற்றியும் அரசிற்கு அறிக்கைகளை அளித்தல் வேண்டும்;

(n) அரசால் அதற்குக் குறிப்பிடக்கூடிய வேறு ஏதேனும் விவரம்.

(2) ஆணையம், உட்பிரிவு (1) இல் (a) அல்லது (f) எனும் கூறின் (i)ஆம் உட்கூறில் குறிப்பிடப்பட்ட விவரம் எதையும் புலனாய்வு செய்கையில், 1908ஆம் ஆண்டு உரிமையியல் நடைமுறைத் தொகுப்புச் சட்டத்தின் (மையச் சட்டம் V/1908) படி, ஓர் உரிமை வழக்கை விசாரணை செய்கின்ற ஓர் உரிமையியல் நீதிமன்றத்தின் அனைத்து அதிகாரங்களையும் குறிப்பாகப் பின்வரும் விவரங்களைப் பொறுத்த அதிகாரங்களையும் கொண்டிருக்கும்; அதாவது:—

(a) நபர் எவருக்கும் அழைப்பாணை விடுத்து, அவரின் வருகையை வலியுறுத்தி, உறுதிமொழியின் பேரில் அவரை விசாரித்தல்;

(b) ஆவணம் எதையும் கண்டறிந்து தாக்கல் செய்யக் கோருதல்;

(c) ஆணை உறுதி ஆவணங்களின் பேரில் சான்று பெறுதல்;

(d) நீதிமன்றம் அல்லது அலுவலகம் எதிலிருந்தும் பொதுப் பதிவுரு அல்லது அதன் படி(நகல்) எதனையும் கோரிப் பெறுதல்;

(e) சாட்சிகள் மற்றும் ஆவணங்களை விசாரிப்பதற்கு ஆணையங்களை ஏற்படுத்துதல்; மற்றும்

(f) வகுத்துரைக்கப்படும் பிற விவரம் எதுவும்;

(3) ஆணையம், விவரம் எதையும் புலனாய்வு செய்த பின்னர், முதல் நோக்கில் பார்க்கும்போது வழக்கு இருப்பதாக மனநிறைவு பெறுமானால், காவல்துறை

உள்ளிட்ட தொடர்புடைய அதிகாரஅமைப்பிற்கு அந்த விவரத்தைக் குறித்தனுப்பலாம்; மற்றும் அத்தகைய அதிகாரஅமைப்பானது சட்டப்படி உரிய நடவடிக்கையை எடுத்தல் வேண்டும்.

(4) ஆணையம், உட்பிரிவு (1)இன்படியான பரிந்துரைகளைச் செய்யும் நோக்கத்திற்காக, இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதிக்கு முன்னர், அரசால், உருவாக்கப்பட்ட குழு அல்லது வேறு ஏதேனும் குழுமம் அல்லது நிறுவனத்தால் செய்யப்பட்ட ஆலோசனை அல்லது பரிந்துரை எதையும் கருத்திற்கொள்ளலாம் அல்லது பின்பற்றலாம்.

(5) அரசு, உட்பிரிவு (1)இன் கூறு (b)இல் குறிப்பிடப்பட்ட அறிக்கைகள் அனைத்தையும், மாநில அரசு தொடர்பான பரிந்துரைகளின் பேரில் எடுக்கப்பட்ட அல்லது எடுக்கப்படவுள்ள நடவடிக்கை மற்றும் அத்தகைய பரிந்துரைகளில் எவையேனும் ஏற்றுக்கொள்ளப்படாமல் இருப்பின், அவற்றிற்கான காரணங்களை விளக்குகின்ற குறிப்புடன் சட்டமன்றப் பேரவை முன்பு வைக்கப்படுவதற்கு ஆவன செய்தல் வேண்டும்.

8. **ஆணையத்தின் குழுக்கள்**.– (1) ஆணையம், அவ்வப்போது, அதனால் நடவடிக்கைக்கு எடுத்துக் கொள்ளப்படக்கூடிய தனிவகையான சிக்கல்களைக் கவனிக்கத் தேவையான அத்தகைய குழுக்களை நியமிக்கலாம்.

(2) ஆணையம், அது பொருத்தமெனக் கருதக் கூடிய அதன் உறுப்பினர்களாக இல்லாத அத்தகைய எண்ணிக்கையுள்ள நபர்களை உட்பிரிவு (1)இன்படி நியமிக்கப்பட்ட குழு எதனின் உறுப்பினர்களாக இசைந்து தெரிவுசெய்துகொள்ளும் அதிகாரத்தைக் கொண்டிருக்கும் மற்றும் அவ்வாறு இசைந்து தெரிவு செய்யப்பட்ட நபர்கள், குழுவின் கூட்டங்களுக்கு வருகை

தரும் உரிமையுடன், கூட்ட நடவடிக்கைகளில் பங்குபெறும் உரிமையைக் கொண்டிருப்பார்கள். ஆனால் வாக்களிக்கும் உரிமை கொண்டிருக்கமாட்டார்கள்.

(3) அவ்வாறு இசைந்து தெரிவு செய்யப்பட்ட நபர்கள், அக்குழுவின் கூட்டங்களுக்கு வருகை தந்ததற்காக வகுத்துரைக்கப்படும் அத்தகைய படித்தொகைகளுக்கு உரிமைத் தகுதியுடையவர் ஆவார்கள்.

**9. நடைமுறைகள் ஆணையத்தால் முறைப்படுத்தப்படுதல்.**– (1) ஆணையமோ அல்லது அதன் ஒரு குழுவோ தேவைப்படும் போதெல்லாம் குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒரு முறையாவது கூடுதல் வேண்டும் மற்றும் தலைவர் பொருத்தமெனக் கருதக் கூடிய அத்தகைய நேரத்திலும் இடத்திலும் கூடுதல் வேண்டும்.

(2) ஆணையம், அதன் சொந்த நடைமுறையையும் அதன் குழுவின் நடைமுறையையும் முறைப்படுத்துதல் வேண்டும்.

(3) ஆணையத்தின் அனைத்து ஆணைகளும் முடிவுகளும் அதன் உறுப்பினர் செயலாளரால் அல்லது இதன் பொருட்டு உறுப்பினர் செயலாளரால் உரியவாறு அதிகாரமளிக்கப்பட்ட பிற அலுவலர் எவராலும் அதிகாரபூர்வமானதாக்கப்படுதல் வேண்டும்.

**10. புலனாய்வு நடத்துவதற்காக ஒருசில அலுவலர்கள் மற்றும் புலனாய்வு முகவாண்மைகளின் சேவையினைப் பயன்படுத்துவதற்கு ஆணையத்திற்கு உள்ள அதிகாரம்.**– (1) ஆணையம், இந்தச் சட்டத்தின்படி புலனாய்வினை நடத்தும் நோக்கத்திற்காக–

(a) மாநில அரசின் அலுவலர் எவரின் அல்லது புலனாய்வு முகவாண்மை எதனின்; அல்லது

(b) பிற நபர் எவரின், சேவையையும் பயன்படுத்தலாம்.

(2) உட்பிரிவு (1)இல் குறிப்பிடப்பட்ட அலுவலர் அல்லது முகவாண்மை அல்லது நபர் எவரும், ஆணையத்தால் பணிக்கப்பட்டவாறு, அந்த விவரத்தைப் புலனாய்வு செய்து, ஆணையத்தால் குறிப்பிடப்படக்கூடிய காலஅளவிற்குள்ளாக, ஆணையத்திற்கு அதன்மீது ஓர் அறிக்கையைப் பணிந்தனுப்புதல் வேண்டும்.

## அத்தியாயம் IV

## நிதி, கணக்குகள் மற்றும் தணிக்கை

11. **அரசு வழங்கும் மானியங்கள்**.– (1) அரசு, இந்தச் சட்டத்தின் நோக்கங்களைப் பயன்படுத்திக் கொள்வதற்கு, அரசு பொருத்தமெனக் கருதுகிற பணத் தொகையை மானியங்கள் என்ற வகையில் ஆணையத்திற்கு வழங்குதல் வேண்டும்.

(2) ஆணையம், இந்தச் சட்டத்தின்படியான பணிகளை நிறைவேற்றுவதற்காக, அது பொருத்தமெனக் கருதுகிற அத்தகைய தொகைகளைச் செலவு செய்யலாம்.

(3) தலைவருக்கும் உறுப்பினர்களுக்கும் வழங்கப்படத்தக்க மதிப்பூதியம் மற்றும் படித்தொகைகள், பிரிவு 6இல் குறிப்பிடப்பட்ட உறுப்பினர் செயலாளர், அலுவலர்கள் மற்றும் பிற பணியாளர்களுக்கு வழங்கப்படத்தக்க சம்பளங்கள், படித்தொகைகள் மற்றும் ஓய்வூதியங்கள் உள்ளிட்ட நிருவாகச் செலவினங்கள், மற்றும் பிரிவு 8இன் உட்பிரிவு (3)இல் குறிப்பிடப்பட்ட நபர்களுக்கான படித்தொகைகள் ஆகியவை, உட்பிரிவு (1)இல் குறிப்பிடப்பட்ட மானியங்களிலிருந்து வழங்கப்படுதல் வேண்டும்.

12. **ஆண்டுக் கணக்குகள் மற்றும் தணிக்கை**.– (1) ஆணையத்தின் கணக்குகள், வகுத்துரைக்கப்படும்

முறையிலும் படிவத்திலும் பேணி வரப்படுதல் வேண்டும். ஆணையம், வகுத்துரைக்கப்படும் படிவத்தில் ஆண்டுக்கணக்கு விவரஅறிக்கை ஒன்றைத் தயாரித்தல் வேண்டும்.

(2) அரசு, இதன்பொருட்டு நியமிக்கும் தணிக்கையாளரால், ஆணையத்தின் கணக்குகள் ஆண்டுதோறும் தணிக்கை செய்யப்படுதல் வேண்டும்.

(3) தணிக்கை நோக்கங்களுக்காக, உட்பிரிவு (2)இன்படி நியமிக்கப்பட்ட தணிக்கையாளர், வகுத்துரைக்கப்படக்கூடிய உரிமைகள், சிறப்புரிமைகள் மற்றும் அதிகார உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) உறுப்பினர் செயலாளர், தணிக்கை அறிக்கையை அச்சிடுவதற்கும் அதன் அச்சுப்படியை அதன் உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் அனுப்பி வைப்பதற்கும், அத்தகைய அறிக்கையை ஆணையத்தின் அடுத்தக் கூட்டத்தில் அதன் பரிசீலனைக்காக, ஆணையத்தின்முன் வைப்பதற்கும் ஆவன செய்தல் வேண்டும்.

(5) ஆணையம், தணிக்கை அறிக்கையில் சுட்டிக்காட்டப்படக்கூடிய குறைபாடு அல்லது முறைகேடு எதனையும் உடனே களைவதற்கு உரிய நடவடிக்கையை எடுத்தல் வேண்டும்.

(6) தணிக்கையாளரால் சான்றளிக்கப்பட்ட, ஆணையத்தின் கணக்குகள், தணிக்கை அறிக்கையுடன் சேர்த்து ஆணையம் அதன்மீது வழங்கும் குறிப்புகளுடன், வகுத்துரைக்கப்படக்கூடிய காலத்திற்குள் அரசிற்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

(7) அரசு, தணிக்கை அறிக்கையில் குறைபாடுகள் எவையேனும் தெரிவிக்கப்

பட்டிருக்குமேயாயின், எழுத்துவடிவிலான ஆணை மூலமாக, அதில் குறிப்பிடப்பட்ட காலஅளவிற்குள், அக்குறைபாடுகளைக் களைவதற்கு அவ்வாணையில் குறித்துரைக்கப்படக்கூடிய நடவடிக்கையை எடுக்குமாறு ஆணையத்தைப் பணிக்கலாம் மற்றும் அதன்பேரில் ஆணையம் அத்தகைய பணிப்புரைக்கு இணங்கி நடத்தல் வேண்டும்.

13. **ஆண்டறிக்கை.–** ஆணையம், நிதியாண்டு ஒவ்வொன்றிற்கும் அதன் தணிக்கை அறிக்கையில் வகுத்துரைக்கப்படக்கூடியவாறு, அதன் முந்தைய நிதியாண்டு நடவடிக்கைகள் முழுவதையும் விவரமாகக் கொடுத்து, அத்தகைய முறையிலும் நேரத்திலும் தயாரித்து, அரசிற்கு அதன் படி(நகல்) ஒன்றினை அனுப்புதல் வேண்டும்.

14. **ஆண்டறிக்கையும் தணிக்கை அறிக்கையும் சட்டமன்றப் பேரவை முன்பு வைக்கப்படுதல் வேண்டும்.–** ஆண்டறிக்கையில் கண்ட பரிந்துரைகளில் அரசு தொடர்பானவற்றின் மீது எந்த அளவிற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது என்ற குறிப்புடனும் மற்றும் அந்தத் தணிக்கை அறிக்கையையும் சேர்த்து அவை பெறப்பட்டவுடன் எவ்வளவு விரைவில் கூடுமோ, அவ்வளவு விரைவில் அந்த அறிக்கைகள் சட்டமன்றப் பேரவை முன்பு வைக்கப்படுவதற்கு அரசு ஆவன செய்தல் வேண்டும்.

## அத்தியாயம் – V

## பல்வகை

15. **ஆணையத்தின் தலைவர், உறுப்பினர்கள் மற்றும் பணியாளர்கள் முதலானோர் பொது ஊழியர்கள் ஆவர்.–** இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் எதனின்படி அல்லது இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட விதி அல்லது ஆணை அல்லது

பணிப்புரை எதனின்படி, செயல்படுகின்ற அல்லது செயல்படுவதாகப் புலப்படுகின்றபோது, ஆணையத்தின் தலைவர், உறுப்பினர்கள், அலுவலர்கள் மற்றும் பிற பணியாளர்கள் இந்திய தண்டனைச் சட்டத்தொகுப்பின் (மையச் சட்டம் XLV/1860) பிரிவு 21இன் பொருளின்படி, பொது ஊழியர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

**16. ஆணையத்திடம் நபர்களால் அளிக்கப்படும் வாக்குமூலங்கள்**.– ஆணையத்திடம் அல்லது பிரிவு 10இன் உட்பிரிவு (1)இல் குறிப்பிடப்பட்ட ஓர் அலுவலர் அல்லது முகவாண்மை அல்லது நபர் முன்பு சான்றளிக்கும்போது ஒரு நபரால் அளிக்கப்பட்ட வாக்குமூலம் எதுவும், அத்தகைய வாக்குமூலத்தின் மூலம் பொய்யான தகவல் கொடுக்கப்பட்டதற்கான குற்றவழக்குத் தொடர்தல் நீங்கலான உரிமையியல் அல்லது குற்றவியல் நடவடிக்கை எதற்கும், உள்ளாக்கப்படுதலோ அல்லது அவருக்கு எதிராகப் பயன்படுத்தப்படுதலோ கூடாது:

**வரம்புரை:** அந்த வாக்குமூலமானது,–

(a) ஆணையத்தால் அல்லது அத்தகைய அலுவலரால் அல்லது முகவாண்மையால் அல்லது அத்தகைய நபரால் பதிலளிக்குமாறு கோரப்பட்டதற்கு மறுமொழியாகச் செய்யப்பட்டது; அல்லது

(b) புலனாய்வின்படியான விவரத்திற்கு உட்பட்டுத் தொடர்புடையது.

**17. பிற சட்டங்களின் பொருந்துகை தடை செய்யப்படுதல் கூடாது.–** பிறவாறு வகை செய்யப்பட்டவை தவிர, இந்தச் சட்டத்தின் வகைமுறைகள், அப்போதைக்கு நடைமுறையில் உள்ள பிற சட்டம் எதற்கும் கூடுதலாக இருத்தல் வேண்டுமேயன்றி அதனைக் குறைவுப்படுத்துவதாக இருத்தல் கூடாது.

**18. நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்குப் பாதுகாப்பு.–** இந்தச் சட்டத்தின்படி அல்லது அதன்கீழ்ச் செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட விதி, ஆணை அல்லது பணிப்புரையின்படி நல்ல எண்ணத்தில் செய்யப்பட்ட அல்லது செய்யக் கருதப்பட்ட செயல் எதற்காகவும், ஆணையத்தின் உறுப்பினர் எவருக்கும் எதிராக அல்லது அதன் அலுவலர் அல்லது பிற பணியாளர் எவருக்கும் எதிராக அல்லது அரசின் அல்லது ஆணையத்தின் பணிப்புரையின்படிச் செயல்படுகின்ற நபர் எவருக்கும் எதிராக உரிமைவழக்கு, குற்றவழக்கு அல்லது பிற சட்ட நடவடிக்கை எதுவும் தொடரப்படுதல் கூடாது.

**19. இடர்ப்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்.–** இந்தச் சட்டத்தின் வகைமுறைகளைச் செயல்படுத்துவதில் இடர்ப்பாடு ஏதேனும் எழுமானால், அரசு, தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும் ஆணை ஒன்றின் மூலமாக, இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு முரணாக இல்லாத வகையில், இந்த இடர்ப்பாட்டை நீக்குவதற்குத் தேவையானவையென்றோ உகந்தவையென்றோ தனக்குத் தோன்றுகின்ற வகைமுறைகளைச் செய்யலாம்:

**வரம்புரை:** ஆனால், அத்தகைய ஆணை எதுவும், இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியிலிருந்து இரண்டாண்டுக் காலஅளவு முடிவடைந்த பின்னர் செய்யப்படுதல் கூடாது.

**20. விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்.–** (1) அரசு, இந்தச் சட்டத்தின் நோக்கங்கள் அனைத்தையுமோ அல்லது அவற்றில் எவற்றையுமோ நிறைவேற்றுவதற்கான விதிகளைச் செய்யலாம்.

(2) குறிப்பாகவும் முன்சென்ற அதிகாரத்தின் பொதுதன்மைக்கு ஊறின்றியும் அத்தகைய விதிகள்,

பின்வரும் விவரங்கள் அனைத்திற்குமோ அல்லது அவற்றில் எவற்றிற்குமோ வகைசெய்யலாம்; அதாவது:–

(a) தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கு வழங்கப்படத்தக்க மதிப்பூதியம் மற்றும் படித்தொகைகள் மற்றும் பிரிவு 4இன் உட்பிரிவு (2) இன்படி தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பணி பற்றிய வரையறைகளும், நிபந்தனைகளும் மற்றும் பிரிவு 6இன் உட்பிரிவு (2)இன்படி அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் சம்பளங்களும், படித்தொகைகளும்;

(b) பிரிவு 8இன் உட்பிரிவு (3)இன்படி இசைந்து தெரிவு செய்யப்பட்ட நபர்கள் கூட்டங்களில் கலந்து கொள்வதற்கான படித் தொகைகள்;

(c) பிரிவு 12இன் உட்பிரிவு (1)இன்படி கணக்குகள் எந்தப் படிவத்திலும் முறையிலும் மற்றும் ஆண்டு கணக்குகளின் விவரஅறிக்கை எந்தப் படிவத்தில் தயாரிக்கப்படுதல் வேண்டும் என்பதும்;

(d) பிரிவு 13இன்படி ஆண்டறிக்கை எம்முறையில் எந்த நேரத்தில் தயாரிக்கப்படுதல் வேண்டும் என்பதும்;

(e) இந்தச் சட்டத்தின்படி வேண்டுறுத்தப்படக்கூடிய அல்லது வகுத்துரைக்கப்படும் பிற விவரம் எதுவும்;

(3) (a) இந்தச் சட்டத்தின்படி செய்யப்படும் விதிகள் அனைத்தும், தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படுதல் வேண்டும் மற்றும் அவை குறிப்பிட்டதொரு நாளில் நடைமுறைக்கு வருதல் வேண்டுமென்று வெளிப்படையாகச் சொல்லப்பட்டாலன்றி, அவை அவ்வாறு வெளியிடப்படும் தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(b) இந்தச் சட்டத்தின்படி பிறப்பிக்கப்படும் அறிவிக்கைகள் அனைத்தும் ஒரு குறிப்பிட்டதொரு நாளில் அவை நடைமுறைக்கு வருதல் வேண்டுமென்று

வெளிப்படையாகச் சொல்லப்பட்டாலன்றி அவை வெளியிடப்படும் தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(4) இந்தச் சட்டத்தின்படி செய்யப்படும் விதி ஒவ்வொன்றும் அல்லது பிறப்பிக்கப்படும் அறிவிக்கை ஒவ்வொன்றும் மற்றும் பிரிவு 19இன்படி செய்யப்படும் ஆணை ஒவ்வொன்றும் அது செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட பின்னர் கூடிய விரைவில் சட்டமன்றப் பேரவையின்முன் வைக்கப்படுதல் வேண்டும்; மற்றும் அது அவ்வாறு வைக்கப்படும் கூட்டத் தொடரோ அதை அடுத்து வரும் கூட்டத் தொடரோ முடிவடைவதற்கு முன்னர் அத்தகைய விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணை எதையும் அச்சட்டமன்றப்பேரவை மாற்றியமைக்குமானால் அல்லது அந்த விதியோ, அறிவிக்கையோ அல்லது ஆணையோ செய்யப்படவோ பிறப்பிக்கப்படவோ கூடாது என்று அப்பேரவை முடிவு செய்யுமானால், அதன்பின்பு அந்த விதியோ அறிவிக்கையோ அல்லது ஆணையோ அவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட வடிவத்தில் மட்டுமே செயல் வடிவம் பெறுதல் வேண்டும் அல்லது நிகழ்விற்கேற்பச் செயல் வடிவம் பெறாது போதல் வேண்டும். எனினும் அவ்வாறு மாற்றியமைப்பது அல்லது செயல் வடிவம் பெறாது போகச் செய்வது எதுவும், அந்த விதியின்படியோ அறிவிக்கையின்படியோ அல்லது ஆணையின்படியோ முன்னதாகச் செய்யப்பட்ட ஏதொன்றின் செல்லுந்தன்மைக்கும் ஊறின்றி இருத்தல் வேண்டும்.